**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**ஆறாம் தவணைப் பரீட்சை - 2021**

# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 6th Term Examination - 2021

**சித்திரக்கலை - I**
**Art - I**

**Gr. 13 (2021)**

**Three Hours**

**அறிவுறுத்தல்கள் :**

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி -I
- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

பகுதி - II
- மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
- **அ பகுதியிலிருந்து இரு வினாவும்,ஆ,இ பகுதிகளில் இருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |


## பகுதி I


- **வினா இல 01 - 05 வரை கீழே தரப்பட்டுள்ள A, B, C, D, E ஆகிய நிழற்படங்களோடு தொடர்புபட்ட வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.**


A


B


C


D


E

*01.* A எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ‘வேலையின்மை’ என்ற ஓவியம்,
(1) தனிநபர் வாதத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(2) கீழைத்தேய கலை நியதிகளைப் பின்பற்றி நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(3) மனப்பதிவுவாத கலைப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.
(4) பின்மனப்பதிவுவாத ஓவிய மரபின் பண்புகளைச் சித்திரிப்பதாகும்.
(5) சாஸ்திராலய யதார்த்தவாத ஓவிய மரபுக்கமைய வரையப்பட்டதாகும். (...............)


*02.* B எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இந்திய ஓவியத்தை வரைந்தவர் யார்?
(1) ஐரோப்பிய சாஸ்திராலயப் பண்புகளைப் பயன்படுத்தாத ராஜா ரவிவர்மா ஆவார்.
(2) இந்தியப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு வரைந்த நந்தலால் போஸ் ஆவார்.
(3) ஐரோப்பிய பின்மனப்பதிவுவாத செல்வாக்கிற்குட்பட்ட அம்ரிதா சேர்கில் ஆவார்.
(4) ஐரோப்பிய யதார்த்தவாதத்துக்கு எதிராக ஓவியங்களை வரைந்த அபனீந்திரநாத் தாகூர்ஆவார்.
(5) இந்திய கிராமியக் கலை மரபுகளின் செல்வாக்குக்குட்பட்ட ஜெமினிறோய் வோர். (...............)

*03.* C எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ‘அசுரசூரசம்ஹாரம்’ என்ற ஓவியம் பற்றிய பொருத்தமற்ற கூற்று யாது?
(1) மேலைத்தேய கலைமரபிற்கமைய முப்பரிமாண இயல்புகளைக் காட்டும் விதத்தில் வர்ணமிடப்பட்டுள்ளது.
(2) கீழைத்தேய கலைப் பண்புகளைக் கொண்டதாக கதைகூறும் பாணியிலிருந்து வேறுபட்ட விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.
(3) சாஸ்திராலய யதார்த்தவாதக் கலைப்பண்புகளைக் கோயில் ஓவியக்கலையில் இணைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
(4) ராஜா ரவிவர்மாவின் கலைப் பண்புகளின் செல்வாக்குக்குட்பட்டுள்ளது.
(5) ஆங்கில - இந்திய மரபுரீதியான பண்புகளுக்கமைய வரையப்பட்டுள்ளது. (...............)

*04.* D எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ‘பீரீட்டா கலோவின்’ ஓவியம்,
(1) உடலமைப்புக்கும் ஒளிக்குமான இடைத்தொடர்பை அவதானித்து வரையப்பட்டதாகும்.
(2) பண்டைய ஒழுங்கமைப்பு முறையியல்களிலிருந்து விடுபட்டு வரையப்பட்டதாகும்.
(3) சமகால சம்பவமொன்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
(4) தனிப்பட்ட வாழ்கையின் உணர்வுகள் குறியீட்டு வடிவில் வரையப்பட்டதாகும்.
(5) மீ யதார்த்த வாதத்தில் காணப்பட்ட எல்லைகளைக் கடந்த விதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
(...............)

*05.* E எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவிய நிர்மாணிப்பின்போது ‘ஜவன் பீரிஸ்’ பயன்படுத்தியுள்ள நுட்பமுறை.
(1) ஒன்றுக்கொன்று எதிரான வர்ணங்களை ஓவியத் தளத்தின்மீது ஒருங்கிணைப்புச் செய்தல்.
(2) அழுத்தமான, குறுகிய தூரிகைத் தடங்களின் மூலம் லயத்தையும் அசைவையும் காட்டுதல்.
(3) தனி வர்ணச் சாயல்களைக் கொண்டு வர்ணம் தீட்டும் பண்பை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது
(4) ஒன்றுக்கொன்று எதிரான வர்ணங்கள் பொருந்திச் சேரும் விதத்தில் வானத்தைச் சித்தரித்தல்
(5) யதார்த்த நிலைமைக்குப் பதிலாக உணர்வு பூர்வமானதொரு எண்ணத்தை ஓவியமாக்கல்.
(...............)

➢ ***வினா இலக்கம் 06 தொடக்கம் 10 வரை கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையினை கீழ்தரப்பட்ட 1 தொடக்கம் 10 வரையுள்ள படங்களில் இருந்து தெரிவு செய்க***


**1**


**2**


**3**


**4**


**5**


**6**


**7**


**8**


**9**


**10**

*06.* பண்டைய நாகரிக காலத்திற்குரிய சிலை எது?
*(1) 1 (2) 4 (3) 5 (4) 6 (5) 8* (...............)

*07.* இந்திய சோழர் காலத்து உலோகச்சிலை எது?
*(1) 3 (2) 4 (3) 7 (4) 8 (5)10* (...............)

*08.* நவீன சிற்பக்கலைஞர்களின் சிற்பக்கலையை வெளிப்படுத்தும் ஆக்கங்கள் எவை?
*(1)1,2,3 (2) 2,7,8 (3) 2,9,10 (4) 1,6,7 (5) 7.8,10* (...............)

09. உரோமா காலத்து பிரதிமைக்கலை ஆக்கமாக கருதப்படும் சிற்பம் எது?

(1) 1 (2) 2 (3) 5 (4) 6 (5) 8 (...............)

10. பாவனையின் பின் வீசப்படும் பொருட்களைக் கொண்டு ஆக்கபட்ட சிற்பங்கள் எவை?

(1) 2,3 (2) 4,7 (3) 3,4 (4) 6,7 (5) 7.8 (...............)

➢ **11 தொடக்கம் 15 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை F, G, H, I, J எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களை கொண்ட பின்வரும் படங்களிலிருந்து தெரிவு செய்க**


F


G


H


I


J

11. F எழுத்தினால் காட்டப்படும் ஓவியம்,

(1) இரேகைக்கும், தட்டையான வர்ணத்திற்கும் முன்னிடம் அளித்த ஜெமினி றோயின் சித்திரம்

(2) இந்திய சித்திரக் கலைஞர் ரவிவர்மாவினால் சித்தரிப்புக்கலை பண்புகளைக் கொண்டு செய்யப்பட்ட சித்திரம்.

(3) தாய்ப்பாசத்தை வெளிக்காட்டும் நந்தலால் போஸ் கலைஞரின் ஓவியம்.

(4) ஐரோப்பிய கலைப்பாணியைக் மட்டும் பின்பற்றி நிர்மாணிக்கப்பட்ட ஓவியம்.

(5) கிராமியக் கலைமரபின் தழுவலைக் கொண்ட அமிர்தாசர்கில் கலைஞரின் சித்திரம். (...............)

12. G எழுத்தினால காட்டப்படுவது,

(1) புத்தர் பெருமான் மகியங்கனைக்கு வருகை தரும் நிகழ்வைச் சித்தரிக்கும் சோலியஸ் மென்டிஸ் கலைஞரின் ஓவியம்.

(2) புத்தர் பெருமான் நயினாதீவுக்கு வருகை தரும் சந்தர்ப்பத்தை சித்தரிக்கும் களனிவிகாரை ஓவியம்.

(3) புத்தர் பெருமான் களனி விகாரைக்கு வருகை தந்த நிகழ்வைச் சித்தரிக்கும் சோழியஸ் மென்டிஸ் கலைஞரின் சித்திரம்.

(4) சோலியஸ் மென்டிஸ்சினால் புத்தர் சரிதையை சித்தரிக்கும் களனி விகாரையில் உள்ள பெரிய சித்திரங்களில் ஒன்று.

(5) புத்தபெருமான் சிவனொலிபாத மலைக்கு வருகைத்தரும் நிகழ்வை சித்தரிக்கும் சோலியஸ் மென்டிஸ் கலைஞரின்சித்திரம். (...............)

13. H எழுத்தினால் காட்டப்படுவது,

(1) மனப்பதிவு வாதக் கலைஞரான வின்சன் வன்கோவின் நிருமாணிப்பு.

(2) உயிரற்ற பொருள் ஒன்று உயிர்ப்புடன் சித்தரிக்கப்பட்டுள்ள பிற்பட்ட மனப்பதிவுவாத ஓவியம்.

(3) மனப்பதிவுவாத கலைஞர் ஒருவரால் வரையப்பட்ட உயிர் அற்ற பொருள் ஒன்று.

(4) உத்தமக்கலை மரபு ரீதியான நுட்ப முறையைப் பின்பற்றி வரையப்பட்ட மனப்பதிவுவாத ஓவியம்.

(5) முப்பரிமாணத் தன்மையை வெளிப்படுத்துகின்ற யதார்த்தவாதக் கலைப்பாணிச் சரித்திரம்.

(...............)

14. I எழுத்தினால் காட்டப்படும் சித்திரத்தை வரையும் பொழுது கலைஞரின் எண்ணமாக இருந்தது.

(1) சூரியன் பிரகாசிக்கும் தன்மையை இயற்கயாக வெளிப்படுத்தல்.

(2) சூரியன் உதிக்கும்பொழுது ஒளியியல் உடனடியாக ஏற்படுகின்ற மாறுபடுகின்ற இயல்பைச் சித்திரமாக வரைதல்.

(3) நீரின் மீது சூரிய ஒளி விழுந்துள்ள தன்மையை வெளிப்படுத்தல்.

(4) அதிகாலையில் சூரிய ஒளி விழுவதனால் நீர் மாறுபடுகின்ற தன்மையைக் காட்டுதல்.

(5) சூரியன் மறையும் சந்தர்ப்பத்தின் அழகைச் சித்திரமாக்கல். (...............)

15. J என்ற எழுத்தினால் காட்டப்படும் ஓவியத்தின் சிறப்பாக கருதப்படுவது
(1) கிறிஸ்தவ கதையினை சிறப்பாக காட்டியுள்ளமை
(2) மனித உருவங்களில் மெய்நிலை சிறப்பாக காட்டப்பட்டுள்ளமை
(3) தொனிப்பொருளில் இடம்பெறும் உருவங்களையும், பின்னணியையும் இலங்கைக்குரியதாக சித்தரித்தமை
(4) தூரதரிசன நுட்பத்தை சிறப்பாக காட்டியமை
(5) வரையறுக்கப்பட்ட ஒரு சில வர்ணங்கள் பயன்படுத்தியமை மூலம் சிகிரிய ஓவியச்சாயலை வெளிப்படுத்தியமை (...............)

❖ **16 தொடக்கம் 20 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16. சுவரொட்டிச் சித்திரத்தினுள் விசேடமாகக் காணப்பட வேண்டியது,
(1) செய்தி வேகமாகவும் தெளிவாகவும் குறியீட்டுத் தன்மையுடையதாகவும் இருத்தல்.
(2) தட்டையான நான்கு வர்ணங்களைக் கொண்டிருத்தல்.
(3) பிரகாசமான வர்ணமும் இயற்கையான வடிவமைப்பையும் பயன்படுத்தல்.
(4) வடிவங்கள் வேறாகும் வகையில் வெளிக் கோடுகளைப் பயன்படுத்தல்.
(5) சமதள அச்சு முறையில் அச்சுப்பதித்தல் செய்ய முடிதல். (...............)


17. பொருட்கூட்டம் பார்த்து வரையக் கற்றலின் நோக்கமானது,
(1) சுதந்திரமான இரேகை மூலம் பொருட்களின் இயல்பை வெளிப்படுத்தல்.
(2) இரேகை தொடர்பான தேர்ச்சியைப் பெறுதல்.
(3) பொருட்களின் இயல்புகளை ஆக்கச் சிறப்புடன் வரைவதற்குப் பழகிக் கொள்ளல்.
(4) அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய விளக்கத்தைப் பெறுதல்.
(5) வர்ணப் பயன்பாட்டின் திறனைப் பெறுதல். (...............)

18. குஷன் சுவருக்கு அல்லது மேசைத் துணிக்கு மிகப் பொருத்தமான அலங்காரமானது,
(1) நவீன வடிவமைப்புக்களைக் கொண்ட பரவுரூப அலங்காரம்.
(2) குறித்த வடிவத்தின் உள்ளே பூரணப்படுத்தப்பட்ட முழுத்தள அலங்காரம்.
(3) குறுக்கு வரியுடன் கூடிய அலங்காரத்தின் மூலம் பூரணமான கோல அலங்காரம்.
(4) அப்பிளிக் முறையில் அல்லது அச்சுப் பதித்தல் மூலம் பூரணப்படுத்தப்படக் கூடிய அலங்காரம்.
(5) அலங்கரிக்கப்பட்ட இருபரிமாண வடிவம் கொண்ட கோல அலங்காரம். (...............)

19. மீ யதார்த்தவாத ஓவியங்களில் காணக்கூடிய பொதுவான பண்பு
(1) இயல்பு நிலைக்கு அப்பாற்பட்ட, இயற்கைக்கு மாறான, கற்பனைத்திறன் கொண்ட, புதிரான உருவங்களைக் காணப்படும்.
(2) கேத்திர கணித வடிவங்களால் ஒழுங்கமைக்கப்பட்ட வடிவங்களாக காணப்படும்.
(3) சேர்மான பொருட்களால் அக்கப்பட்ட பழங்குடி ஓவியங்களை கொண்டிருக்கும்
(4) அக்கடமி யதார்த்தவாத பண்புகளை வெளிகாட்டும் வகையில் காணப்படும்.
(5) பண்டைய ஒழுங்கமைப்பு முறையியல்களிலிருந்து விடுபட்டு வரையப்பட்டதாகும். (...............)

20. நீர் வர்ண ஊடகத்தைப் பயன்படுத்தும் ஓவியத்தில் இருக்க வேண்டிய சிறப்பான பண்பு
(1) தளம் முழுவதும் நிறம் சமநிலையில் பரவப்பட்டிருத்தல்
(2) நீருடன் கலக்கப்பட்ட நிறம் தூரிகை அடிப்பு இருப்பது போல தடித்த நிறப் பிரயோகம்
(3) ஊடுகாட்டும் முறையிலான நிறங்கள் நீருடன் கலக்கப்பட்டிருக்கும் விதத்தைப் பிரதிபலித்தல்
(4) வெள்ளை நிறம் பயன்படுத்தப்படுவதால் நிறங்களின் வன்மை, மென்மை காட்டப்பட்டிருத்தல்
(5) மூலவர்ணங்களில் தடயங்கள் தெளிவாக தெரிதல் (...............)

- **வினா இல 21 - 25 வரை கீழே தரப்பட்டுள்ள P,Q,R,S,T ஆகிய நிழற்படங்களோடு தொடர்புபட்ட வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.**


P


Q


R


S


T

21. P எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மரச்செதுக்கலைக் காணக்கிடைப்பது,
    (1) மரத்தினாலான பழமையானதொரு அம்பலத்திலாகும்.
    (2) எம்பக்க கிராமத்தில் உள்ள பழமையானதொரு அம்பலத்திலாகும்.
    (3) வயல்வெளியொன்றில் தூணொன்றின் மீது அமைந்துள்ள அம்பலத்திலாகும்.
    (4) இறைவனுக்கான பூஜைகள் நடாத்தப்படும் கோயிலொன்றின் அம்பலத்திலாகும்.
    (5) பனாவிட்டிய பிரதேசத்திலுள்ள அம்பலத்திலாகும். (...............)

22. Q எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கைப்பிடிச்சுவர்,
    (1) அனுராதபுரத்தில் காணக்கிடைக்கும் செதுக்கல்களைக் கொண்ட அலங்கார நிர்மாணிப்பாகும்.
    (2) அனுராதபுரத்தின் ரத்ன பிரசாதயவில் காணக்கிடைக்கும் செதுக்கலாகும்.
    (3) அனுராதபுரத்தின் ராணி மாளிகைக்கு அருகில் காணக்கிடைக்கும் கலையம்சம் மிக்கதொரு நிர்மாணிப்பாகும்.
    (4) பொலன்னறுவைக் காலத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள பெறுமதி வாய்ந்ததொரு செதுக்கலாகும்.
    (5) பொலன்னறுவை லங்காதிலக விகாரைக்கு முன்னால் உள்ள அலங்காரச் செதுக்கலாகும். (...............)

23. R எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிற்பத்தின் மூலம்
    (1) சோழர் கலை மரபின் எண்ணக்கருவொன்றாக இதனை இனங்காணலாம்.
    (2) ஆலமரமொன்று இராஜ லீலையுடனும் நான்கு கைகளுடனும் சிவனின் தட்சணா மூர்த்தி வேடம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது
    (3) நிர்வாணமான யோக நிலையில் உள்ள முனிவர் ஒருவரைப் போல் சிவபெருமானின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது.
    (4) இயற்கைவாத பண்புகளுடன் மோடிப்படுத்தப்பட்ட கலைப்பாணியில் வடிவமைக்கப் பட்டுள்ளன.
    (5) வெண்கல உலோகத்தினால் வார்ப்பு முறையில் நிர்மாணிக்கப்பட்ட இச் சிற்பம் சோழ காலத்துக்குரியது. (...............)

24. S எழுத்தால் காட்டப்படும் சிலையானது
    (1) புதிய எகிப்திய மரபுக்கமைய செதுக்கப்பட்ட சிற்பம்
    (2) பேரோ ஒருவரை வெளிக்காட்டுகின்ற மரபுரீதியான சிற்பம்
    (3) கப்றே என்னும் பெயரில் இனங்காணப்படும் சிற்பம்
    (4) கெசிறா என்னும் பெயரால் இனங்காணப்படும் எகிப்திய பழைய இராசதாணி கால சிற்பம்
    (5) எகிப்திய மரபின் தொடர்ச்சியைக் காட்டும் கிரேக்க ஆரம்ப காலச் சிற்பம் (...............)

25. $T$ எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பாரதத்தின் காந்தார தேசத்தில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலை
(1) தக்திபஹி புத்தர் சிலையாகும்.
(2) துஸ்தரக்கிரியாவ புத்தசிலையாகும்.
(3) சஹ்ரி பகலொல் புத்தர் சிலையாகும்.
(4) பிரெகம் புத்தர் சிலையாகும்.
(5) கிரேக்க கிறிஸ்துதேவ புத்தர் சிலையாகும் (...............)

➢ **26 தொடக்கம் 30 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க**

26. மகியங்கனையில் தாதுகர்ப்பத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற ஓவியங்களிடையே
(1) சச ஜாதகத்தைச் சித்திரிக்கும் சித்திரம் ஒன்று காணப்பட்டது.
(2) புத்தர் நிலை அல்லது ஞானம் பெறும் நிகழ்வைக் காட்டும் சித்திரத் துண்டும் கிடைத்துள்ளது.
(3) தபசி பள்ளுக தேபானன் காணப்படும் சித்திரத் துண்டும் கிடைத்துள்ளது.
(4) இந்திரஜால குகைக்கு சக்கர தெய்வம் வருகை தரும் சந்தர்ப்பத்தைக் காட்டும் சித்திரமும் கிடைத்துள்ளது.
(5) தேவர்கள் அமர்ந்திருக்கும் வடிவம் ஐந்தினைக் கொண்ட சித்திரமொன்றும் கிடைத்துள்ளது.
(...............)

27. கம்பளைக்காலத்திற்குரிய கடலதெனிய விகாரை
(1) திராவிடக் கட்டடக்கலை பண்புகளுக்கமைய நிர்மாணிக்கபட்ட பௌத்த விகாரையாகும்
(2) ஆரம்பத்தில் இந்துக்கோயிலாக இருந்து பிற்காலத்தில் விகாரையாக மாற்றப்பட்டதாகும்
(3) இந்துக்களான திராவிடக்கடவுளால் நிர்மாணிக்கப்பட்டதாகும்
(4) கருங்கல்லால் நிர்மாணிக்கபட்ட பௌத்த விகாரையாகும்
(5) கம்பளைக்காலத்திற்குரிய தனித்துவமான விகாரையாகும் (...............)

28. மௌரிய கலைக்குரிய அசோகத் தூண்கள் பெருமளவில் நிர்மாணிக்கப்பட்டமை
(1) புத்தர் சரிதையுடன் தொடர்புபட்ட நிகழ்வுகள் நடைபெற்ற நிலையங்களை நினைவு படுத்துவதன் பொருட்டாகும்.
(2) அசோக மன்னனின் கீர்த்தியை நாட்டிற்கு வெளிப்படுத்துவதன் பொருட்டாகும்.
(3) அசோக மன்னனின் பௌத்த சமயத்தைப் பின்பற்றிய செய்தியைக் குறியீடாகக் கொள்வதன் பொருட்டாகும்.
(4) அசோக மன்னனின் தர்ம பிரசார செயற்பாடுகளை நினைவுறுத்துமுகமாகவாகும்.
(5) அசோக மன்னனின் கலிங்கத்து யுத்த வெற்றியை நினைவுறுத்துமுகமாகவாகும். (...............)

29. திவங்க சிலை மனைகளில் காணக்கூடிய ஓவியங்கள்
(1) தெய்வ எண்ணக்கருவை சித்தரிக்கும் ஓவியங்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது .
(2) பொலன்னறுவைக் காலக் கலைஞர்களின் திறனை எடுத்துக்காட்டுகிறது.
(3) கண்டி மரபினைப் போலவே சிகிரிய மரபுடன் குறிப்பிட்ட அளவு தொடர்புடையது.
(4) பொலன்னறுவைக் காலத்திற்குரிய ஓவியங்கள் காணப்படும் ஒரேயொரு இடமாகும்
(5) சுதேச ஓவிய மரபின் தரத்தைக் காட்டுகிறது. (...............)

30. கிரேக்க ஹேர்மிசும் டயோனியசும் சிலையானது.
(1) இளமையின் பலமும் குழந்தையின் மழலைத்தனமும் வெளிப்படுத்தப்படுகின்ற பண்டைய கால நிர்மாணிப்பாகும்.
(2) கிரேக்க இலக்கியத்தில் வருகின்ற வீரம் மிக்க தேவ பாத்திமொன்றுடன் தொடர்புடைய செய்தியாகும்.
(3) கிரேக்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் அன்புக்கு அதிபதியான கடவுளாவார்.
(4) பாற்பளிங்கினால் செய்யப்பட்ட மனித பிரமாணத்தைக் கொண்ட கிரேக்க சோடிச் சிற்பமாகும்.
(5) பண்டைய காலத்தில் உருவான பேராற்றல் கொண்ட சிற்பக்கலைஞரின் நிர்மாணிப்பாகும்.
(...............)

➢ **31 தொடக்கம் 35 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு முன்னாலுள்ள நிர்மாணிப்புகளின் உருவப் படங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்க.**



31. அருகில் காட்டப்பட்டுள்ள காவற்கல் செதுக்கலானது,
(1) அனுராதரபுரக்காலத்தின் செதுக்கல்களை நினைவு படுத்துகின்றது.
(2) நாகர் மன்னனின் உருவத்தைச் சித்தரிக்கின்ற சிறுபடைப்புச் செதுக்கலாகும்.
(3) பல்வேறு குறியீடுகள் ஒன்றிணைந்த புதிய நிர்மாணிப்பாகும்.
(4) விகாரைகளின் நுழைவாயிலில் பாதுகாப்பின் குறியீடாக நிர்மாணிக்கப்படுவதாகும்.
(5) அனுராதபுரக் காலத்தில் மிக உன்னதமான காவற்கல் என கணிப்பிடப்படுகிறது.

(...............)



32. அருகில் காட்டப்பட்டுள்ள சிந்துவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட முண்டப் படிமமானது,
(1) சாம்பல்நிற சுண்ணக்கல்லில் செதுக்கப்பட்ட மனித அளவிலானதொரு சிலையாகும்.
(2) யதார்த்தபூர்வமான உடலம்சங்களை நேர்த்தியாகப் பூரணப்படுத்தியுள்ள நடன அசைவை க்காட்டும் சிலையாகும்.
(3) சமய தத்துவமொன்றினால் உருவான பாவம் நிறைந்ததொரு சிலையாகும்.
(4) இந்து சமயப் கடவுளொருவர் சித்தரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(5) மொசப்பத்தேமிய பண்புகளைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டதாகும். (...............)



33. அருகில் காட்டப்பட்டுள்ள பரிதி வட்டம் எறிபவரின் சிலை,
(1) செயற்றிறனான மனித உருவங்களை ஆக்குவதில் திறமையாளரான பிரக்சிடெலஸ்சின் நிர்மாணிப்பாகும்.
(2) கிரேக்க விளையாட்டு வீரரொருவரைச் சிலையாக வடிப்பதற்கு பொலிக்லீடர்சினால் எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும்.
(3) வெண்பளிங்கு ஊடகத்தில் அதி திறமையாளரான மயூரனின் சிலையொன்றாகும்.
(4) செயற்றிறனான அசையும் கொண்ணிலையொன்று சித்திரிக்கப்பட்டுள்ள பீடியஸ்சின் சிலையாகும்.
(5) மனித உருவின் சிக்கலான கொண்ணிலையொன்று சித்தரிக்கப்பட்டுள்ள கிரேக்கச் சிலையாகும்.

(...............)

34. அருகில் காட்டப்பட்டுள்ள நீர்த்தடாகம்.



(1) வட்டமாக ஒழுங்கமைக்கப்பட்ட கற்களைச் சேகரித்துச் செய்யப்பட்ட நிர்மாணிப்பாகும்.
(2) ஆலாகண பிரிவெனா பிரதேசத்தில் காணத்தக்க தடாகமாகும்.
(3) பொலன்னறுவைக் கலைஞரின் தடாக நிர்மாணப்பின் விசித்திரமானதொரு படைப்பாகும்.
(4) இயற்கைப் படைப்பொன்றின் விசித்திரமான தன்மையை கலை நிர்மாணத்துக்காகப் பயன்படுத்தி யுள்ளமையாகும்.
(5) கற்பாறையைக் குடைந்து வட்டவடிவத்தை உருவாக்கிச் செய்யப்பட்ட நிர்மாணிப்பாகும்.

(...............)

35. அருகில் காட்டப்படும் பாரத்தின் சாரானாத் குருகுலத்தில் நிர்மாணிக்கப்பட்ட அதி சிறந்த புத்தர் சிலையினால்,



(1) குப்தர் காலத்திற்குரிய மரபு ரீதியான பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.
(2) புத்த பகவான் மிகதாயில் முதலாவது தர்ம உபதேசத்தினைச் செய்த சந்தர்ப்பம் வெளிப்படுத்தப்படுகின்றது.
(3) புத்தபகவானின் முப்பத்திரண்டு விசேட பண்புகள் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றன.
(4) சாரானாத் குருகுலத்தில் உருவான புத்தர் சிலைகளின் பொதுப் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.
(5) புத்தபெருமானது சுயபுலனடக்கத்தை (துஸ்தரக்கிரியாவை) வெளிப்படுத் தப்படுகின்றது. (...............)

- **வினா இல 36 - 40 வரை கீழே தரப்படும் நிழற்படம் தொடர்பாக கேட்கப்படும் வினாவிற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் இடுக.**



36. இவ்வோவியத்தை வரைந்த கலைஞர்.
(1) வெளிநாட்டுச் செல்வாக்கிற்குட்பட்டு ஓவியங்களை வரைந்த ஹரிப்பிரீஸ் ஆவார்.
(2) உள்ளூர் பாரம்பரியங்களை முன்னிலைப்படுத்திய பீலிங் ஆவார்.
(3) விகாரைச் சித்திரக்கலையை புதிய பாதையிற் செலுத்திய ஜோர்ஜ் கீட் ஆவார்.
(4) 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்களுள் நவீனத்துவ வாதக் கலைப் பாணிகளைக் கொண்ட ஐவன் பீரிஸ் ஆவார்.
(5) ஓவியக் கலைக்குப் பங்களிப்பு நல்கிய மஞ்சுஸ்ரீ ஆவார். (...............)

37. இந்த ஓவியத்தின் கருப்பொருளாக அமைவது.
(1) திரும்பிவருதல் (2) கல்கிசை
(3) கடற்கரை (4) சந்திர உதயம்
(5) மீனவர்கள் வாழ்க்கை (...............)

38. இவ்வோவியத்தின் மூலம் கலைஞர்,

(1) மனித உருவங்களினதும் ஏனைய பொருள்களினதும் இயற்கைப் பண்புகளை யதார்த்த பூர்வமாகப் பயன்பாட்டிற்கு எடுத்துள்ளார்.

(2) இயற்கையான மனித உருக் கட்டமைப்பை குறித்தவொரு பாணியில் கையாண்டுள்ளார்.

(3) இயற்கையில் காணப்படுபவற்றின் இயல்பான தன்மையை திரிவுபடுத்தி, எளிமையான வடிவங்களாக இதனை முன்வைத்துள்ளார்.

(4) உயிர்ப்பொருள்களின் அசைவுகளை கலைப்பாங்கான பாரம்பரியத்துக்கமைய கையாண்டுள்ளார்.

(5) மனித உருவங்களை சரியான அளவுப் பரிமாணங்களின் படி ஒருங்கிணைத்து வரைந்துள்ளார்.

(...............)

39. இந்த ஓவியம் தொடர்பில் மிகப் பொருத்தமான கூற்று யாது?

(1) சிறப்பான ஒழுங்கின் அடிப்படையில் வரையப்பட்டுள்ள உருவங்கள், வர்ணப் பயன்பாடு என்பன மட்டற்ற பாவ வெளிப்பாட்டைக் கொண்டதாகும்.

(2) உணர்வு வெளிப்பாட்டுக்காக அதிகளவிலான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(3) ஒழுங்கமைப்பின் மூலம் தொனிப்பொருளுக்கு நியாயமான இடமொன்று வழங்கப்பட்டுள்ளது.

(4) நிலக்காட்சி ஓவியக் கலைக்கு உகந்த புதியதொரு ஓவியப் பாணி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(5) இவரது ஓவியங்கள் அதிகமாக தனி வர்ணச் சாயல்களைக் கொண்டுள்ளன. இவ்வோவியத்திலும் அப்பண்பையே அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. (...............)

40. இவ் ஓவியத்தின் படைப்பாளி

(1) மேற்கத்தேயக் கலை மரபின் தாக்கத்தைக் கொண்டு அவற்றுக்கு ஒத்ததாக வரைந்துள்ளார்.

(2) கிழைத்தேய கலை மரபின் தாக்கத்தைக் கொண்டு அவற்றுக்கு ஒத்ததாக வரைந்துள்ளார்.

(3) கனவடிவவாத ஓவியக் கலையின் செல்வாக்கையும் பியற் மொன்றியலின் ஓவியக் கலை செல்வாக்கினையும் பெற்று அவற்றுக்கு ஒத்ததாக வரைந்துள்ளார்.

(4) அருவ வாத ஓவியக் கலை செல்வாக்கினையும் பெற்று அவற்றுக்கு ஒத்ததாக வரைந்துள்ளார்.

(5) அக்கடமி யதார்த்த வாத ஓவியக் கலை செல்வாக்கினையும் பெற்று அவற்றுக்கு ஒத்ததாக வரைந்துள்ளார்.

(……. )

## பகுதி II

➢ **அ பகுதியிலிருந்து இரு வினாவும், ஆ, இ பகுதிகளில் இருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

### உப பகுதி ‘அ’

**(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)**

01. **19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் பிரானஸ் நாட்டின் பரிஸ் நகரத்தை மையமாகக் கொண்டு உருவாகிய நவீன ஓவியக் கலைப் போக்குகளின் செல்வாக்கை 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்கள் பெற்றனர்.**
    i) 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்களில் கிறீஸ்தவ தேவாலயம் மற்றும் பௌத்த விகாரை ஓவியங்களை வரைந்த ஓவியர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
    ii) எல். பீ. டீ. மஞ்சு ஸ்ரீயின் பத்தினி ஆலயம் என்ற ஓவியத்தின் கலைத்துவப் பண்புகளை அறிமுகம் செய்க.
    iii) ஹரீ பீரிஸின் இருவகையான கலை நிர்மாணிப்புக்கள் நவீன ஓவியக்கலைக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியது உதாரணத்துடன் விளக்குக.

02. **இலங்கையில் வழிபோக்கர்கள் தங்குவதற்காக புதிய கட்டட அமைப்புக்களும் உருவாகி உள்ளதைக் காணலாம்.**
    i) எம்பக்க ஆலய சிறப்பான கூரையமைப்பின் பெயரினைத் தருக
    ii) எம்பக்க ஆலய கலைஞர் தமது கலைத்திறமையை தூண்களின் நடுவில் நாற்கோண செதுக்கல்களில் காண்பித்துள்ளனர். அங்கு காணப்படும் செதுக்கல்களை வகைப்படுத்தி ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணங்கள் தருக.
    iii) பனாவிட்டிய அம்பலத்தின் கட்டடக்கலை அம்சங்களையும் ,செதுக்கல் வேலைப்பாடுகளையும் விமர்சிக்குக.

03. **அனுராதபுரக் காலத்தில் பல்வேறு அரிய படைப்புக்கள் உருவாக்கப்பட்டன.**
    i) அநுராதபுரக் காலத்திற்குரிய அழகிய இரு குள நிர்மாணிப்புக்களின் பெயரினைத் தருக.
    ii) இருந்த நிலைப் புத்தர் சிலைகளில் பங்குளிய புத்த சிலை வித்தியாசமான நிர்மாணிப்பாக கருதப்படுகிறது விமர்சிக்குக.
    iii) அனுராதபுர பௌத்த ஓவியங்களைக் கொண்ட இடமாக மகியங்கனை தாதுகோப ஓவியங்கள் அமைகிறது விமர்சிக்குக.

### உப பகுதி ‘ஆ’

**(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)**

04. **இந்திய பௌத்த கலைப் படைப்புகளில் முதிர்ச்சியடைந்த தன்மையினை அமராவதி படைப்புகளைக் காணக்கூடியதாக உள்ளது.**
    i) இந்தியா புராதன பௌத்த செதுக்கலில் பயன்படுத்தப்பட்ட குறியீடுகள் இரண்டு தருக.
    ii) அமராவதி செதுக்கல்களில் எஞ்சியுள்ள தூண் செதுக்கல் தரும் தகவல்களை சுருக்கமாக விளக்குக.
    iii) நளகிரி யானையை அடக்குதல் என்ற சிற்பத்தில் காணக்கூடிய இந்திய சிற்பக்கலையில் ஏற்ப முதிர்ச்சித் தன்மையினை விளக்குக.

**05) மொகலாய கலையும் இராஜபுத்தானியக் கலையும் சமகாலத்தில் வளர்ச்சி பெற்ற கலைப்பாணிகளாகும்.**

i) இராஜபுத்தானிய ஓவியக்கலைக்கு பங்களிப்பாற்றிய நூல்கள் இரண்டு தருக.

ii) “இராக மாளிகை” சித்திரங்கள் என்ற விடயம் தொடர்பாக அறிமுகம் செய்க.

iii) மொகலாய சித்திரங்களையும் இராஜபுத்தானிய சித்திரங்களையும் அதன் பண்பு / பாணி, விடயப் பொருள் போன்றவற்றின் அடிப்படையில் ஒப்பிட்டு விமர்சனம் ஒன்று முன் வைக்குக.

**உப பகுதி ‘இ’**

**(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)**

**06) 19 ஆம் நூற்றாண்டில் செல்வாக்கு செலுத்திய கலைமரபுகளில் மனப்பதிவு வாதமும் ஒன்றாகும்.**

i) ஏட்காட் டெகாசின் ஓவியங்கள் இரண்டின் பெயரினைத் தருக.

ii) கிளொட் மொனேயின் ஓவியங்களின் பண்பினை உதாரணத்துடன் சுருக்கமாக விளக்குக.

iii) *மனப்பதிவு வாத சிற்பியான ஒகஸ்தே றொடினின்* சிந்தனையாளர் படைப்பில் காணப்படும் மனப்பதிவுவாத பண்புகளை மதிப்பிடுக.

**07) உரோமானியக் கலை கிரேக்க கலையை அடிப்படையகாக் கொண்டு ஆரம்பித்த போதிலும் பின்னர் உன்னத படைப்புக்கள் பலவற்றை நிர்மாணிப்பதில் உரோமானியர் வெற்றியீட்டினர்.**

i) உரோமானிய சிற்பங்களிடையே காணப்படும் இரண்டு மார்பளவுத் தலைச் சிலைகளைக் குறிப்பிடுக.

ii) உரோமானிய சுவரோவியம் ஒன்றினைக் குறிப்பிட்டு சுருக்கமாக அறிமுகஞ் செய்க.

iii) சிதைந்துள்ள கொலோசியம் கட்டடம் உரோமானிய கட்டடக்கலைஞர்களின் சிறந்த படைப்பாகும். இதன் கட்டட அமைப்பின் மாதிரியை அறிமுகஞ் செய்து மதிப்பிடுக.

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 6th Term Examination - 2021

FWC

| | | |
|---|---|---|
| சித்திரக்கலை - II<br>Art - II | Gr. 13 (2021) | Three Hours |

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் :-**

- ✶ **உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.**
- ✶ **விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.**

### இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள் கூட்டமும்

❖ **கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன் கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணந்தீட்டுக.**

- கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
- பொருட்களினதும் செடி / கிளையினதும் இயல்பு, வெளிப்புறத்தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, மற்றும் தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன கவனத்திற் கொள்க.
- பொருள் தொகுதி உமக்குத் தெரிகின்ற தன்மையில் வரைந்து, அதன்மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற்கொண்டு வர்ணந்தீட்டுக.
- வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.
- பொருள் தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.
- பொருள் தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
- நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

FWC

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**ஆறாம் தவணைப் பரீட்சை - 2021**
**Conducted by Field Work Centre, Thondaimanaru.**
**6th Term Examination - 2021**

**சித்திரக்கலை - III**
**Art - III**

**Gr. 13 (2021)**

**Three Hours**

**அறிவுறுத்தல்கள்**

- ❖ **கீழே தரப்பட்டுள்ள அ, ஆ, இ ஆகிய பகுதிகளிலிருந்து ஒரு பகுதியை மாத்திரம் தெரிவு செய்க. அதிலிருந்து ஒரு தலைப்பை மட்டும் தெரிவு செய்து வர்ணச்சித்திரம் ஒன்றை வரைக.**
- ❖ **உமது பரீட்சை சுட்டெண்ணையும் தெரிவு செய்த விரைவின் இலக்கத்தையும் தாளில் பின்புறத்தில் இடது பக்க மூலையில் தெளிவாக எழுதுக.**
- ❖ **விரும்பிய வர்ண ஊடகம் (ஒன்றுக்கு மேற்பட்ட வர்ண ஊடகங்கள் கலந்தும்) பயன்படுத்தலாம்.**

## பகுதி - அ
### சித்திர ஒழுங்கமைப்பு

➢ **பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை மட்டும் தெரிவு செய்க.**

1) இறங்குதுறையும் மக்கள் கூட்டமும்
2) பஸ் வண்டிக்காக காத்திருக்கும் பயனிகள்
3) புத்தாண்டை முன்னிட்டு தெருவோரம் நடக்கும் வியாபாரம்.
4) நீராடுதுறையில் பெண்கள்

## பகுதி - ஆ
### ஆக்க அலங்காரம்

➢ **பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை மட்டும் தெரிவு செய்க.**

**5)** பித்தளையில் உருவாக்கப்பட்ட வெற்றிலை தட்டம் ஒன்றிற்கான முழுத்தள அலங்கார மொன்றை நிர்மாணிக்குக.

**6)** 9"x 9" அங்குல மாபிள் கல்லொன்றிற்கான முழுத்தள அலங்கார மொன்றை நிர்மாணிக்குக.

**7)** 3' அடி (90 செ.மீ) விட்டம் கொண்ட மேசையொன்றுக்கான விரிப்பிற்கான முழுத்தள அலங்கார மொன்றை நிர்மாணிக்குக.

## பகுதி - இ
### கிறபிக் சித்திர ஆக்கம்

➢ **பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை மட்டும் தெரிவு செய்க.**

8) "நன்நீரினைப் பாதுகாப்போம்" சுவரொட்டியொன்றை திட்டமிடுக.
9) பல்பொருள் அங்காடி ஒன்றிற்கான விளம்பரப் பதாகையொன்றை திட்டமிடுக.
10) "விடுகதைகள்" என்ற நூலுக்கான அட்டைப்படமொன்றை திட்டமிடுக.

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**ஆறாம் தவணைப் பரீட்சை - 2021**
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 6th Term Examination - 2021


**சித்திரக்கலை - II**
**Art - II**

**Gr. 13 (2021)**

**Three Hours**

**மேற்பார்வையாளருக்குரியது**

**நிலைப்பொருட்கூட்ட வரைதல்**



**வைக்கப்பட வேண்டிய பொருட்கள்**

- பெட்டி
- பானை
- போத்தல்
- துணி
- குறோட்டன்